# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 08 | புவியியல் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..................................

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வருவனவற்றுள் மிகப் பெரிய நட்சத்திரம்.

1) சூரியன் 2) வெள்ளி 3) சந்திரன் 4) ஓறியன்

02) இரவில் வானத்தில் மிகத் தெளிவாகப் புலப்படக் கூடிய கோள்.

1) வியாழன் 2) வெள்ளி 3) சனி 4) புதன்

03) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள இரண்டாவது பெரிய கோள்.

1) வெள்ளி 2) வியாழன் 3) செவ்வாய் 4) சனி

04) சூரியனையும் சந்திரனையும் அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படும் விழா.

1) நத்தார் 2) தமிழ் சிங்களப் புத்தாண்டு
3) பொசன் 4) தீபாவளி

05) புவியின் மேற்பரப்பு சராசரி வெப்பநிலை.

1) 464°C 2) 167°C 3) 15°C 4) 225°C

06) பிரபஞ்சம் தொடர்பான ஆய்வில் திருப்பு முனை ஏற்படக் காரணமான தொலைக்காட்டியைக் கண்டு பிடித்தவர்.

1) குளோட்டியஸ் தொலமி 2) கலிலியோ கலிலி
3) ஐசாக் நியூட்டன் 4) நிக்கலஸ் கொப்பநிக்கஸ்

07) விண்வெளி தொடர்பான தகவல்களை ஆய்வு செய்வதற்கு முதன்முதலில் செய்மதியை அனுப்பிய நாடு.

1) ரஷ்யா 2) ஐக்கிய அமெரிக்கா 3) இத்தாலி 4) சீனா

08) புவி தனது அச்சில் தன்னைச் சுற்றி அசையும் திசை.

1) கிழக்கிலிருந்து மேற்கு 2) கிழக்கிலிருந்து வடக்கு
3) மேற்கிலிருந்து கிழக்கு 4) மேற்கிலிருந்து வடக்கு

09) புவி 1° யைக் கடந்து செல்வதற்கு எடுக்கும் காலம்.

1) 15 நிமிடம் 2) 8 நிமிடம் 3) 4 நிமிடம் 4) 6 நிமிடம்

10) நாடுகளை ஊடறுத்துச் செல்லாத வகையில் வரையப்பட்ட நெடுங்கோடு.

1) 180° நெடுங்கோடு 2) 0° நெடுங்கோடு 3) 80°நெடுங்கோடு 4) 60° நெடுங்கோடு

11) லீப் வருடத்தில் காணப்படும் நாட்களின் எண்ணிக்கை.

1) 365 நாட்கள் 2) 364 நாட்கள் 3) 360 நாட்கள் 4) 366 நாட்கள்

12) சூரியன் மத்திய கோட்டில் உச்சம் கொடுக்கும் காலம்.

1) மார்ச் 21 2) மார்ச் 22 3) ஜுன் 21 4) டிசம்பர் 22

13) தென்னாசிய நாடுகளின் கூட்டமைப்பான "சார்க்" அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள மத்திய ஆசியப் பிரதேசத்திற்குரிய நாடு.

1) பாக்கிஸ்தான் 2) ஆப்கானிஸ்தான் 3) நேபாளம் 4) பூட்டான்

14) நிலப்பரப்பினால் சூழப்பட்ட தென்னாசிய நாடுகள்.

1) இந்தியா, பூட்டான்
2) நேபாளம், பாகிஸ்தான்
3) பங்களாதேஷ், இந்தியா
4) நேபாளம், பூட்டான்

15) இலங்கையின் வடக்கே பருத்தித்துறையில் இருந்து தெற்கே தெய்வேந்திர முனை வரையான இலங்கையின் நீளம்.

1) 432Km 2) 323Km 3) 224Km 4) 230Km

16) பின்வருவனவற்றுள் பௌதிக அம்சங்கள்.

1) மலைகள், நதிகள்
2) வீதிகள், ஆறுகள்
3) குளம், நிர்வாக எல்லைகள்
4) கடல், வாகனங்கள்

17) சர்வதேச ரீதியாக பெற்றுக் கொள்ளப்பட்ட நியம நேரத்தைப் பயன்படுத்துவதற்காக நெடுங்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட புவியின் நேர வலயங்களின் எண்ணிக்கை.

1) 12 2) 32 3) 24 4) 36

18) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள தனித்துவம் மிக்க கோளாகக் கருதப்படுவது.

1) செவ்வாய் 2) புதன் 3) வெள்ளி 4) புவி

19) உபகோள்களைக் கொண்டிராத கோள்கள்.

1) புதன், வெள்ளி
2) புதன், வியாழன்
3) சனி, வெள்ளி
4) வியாழன், வெள்ளி

20) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகக் கூடிய ஈர்ப்பு சக்தியுள்ள கோள்.

1) புதன் 2) வியாழன் 3) வெள்ளி 4) சனி

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01)

01) இரண்டாம் தவணையில் புவியியல் பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டின் வகையினை எழுதுக. (2 புள்ளிகள்)


02) மேற்படி கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகினை எழுதுக. (2 புள்ளிகள்)

03) கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

04) கணிப்பீட்டிற்கான தகவல்களைத் திரட்டிய வழிகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)

05) இக் கணிப்பீட்டினை மேற்கொண்டமையால் நீர் பெற்ற நன்மைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

02) படத்தில் குறிப்பிடப்பட்ட ஆங்கில எழுத்துக்களை இனங்கண்டு தரப்பட்ட விடயங்களுக்குப் பொருத்தமான எழுத்துக்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.




| | | | |
|---|---|---|---|
| 01) இந்தியா | (   ) | 07) வங்காளா விரிகுடா | (   ) |
| 02) இலங்கை | (   ) | 08) பாக்கு நீரிணை | (   ) |
| 03) பாக்கிஸ்தான் | (   ) | 09) மாலைதீவுகள் | (   ) |
| 04) நேபாளம் | (   ) | 10) ஆப்கானிஸ்தான் | (   ) |
| 05) பூட்டான் | (   ) | 11) அரபுக் கடல் | (   ) |
| 06) பங்களாதேஷ் | (   ) | 12) அந்தமான் தீவுகள் | (   ) |

(12 புள்ளிகள்)

03)

01) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகப் பெரிய கோளைத் தருக. (2 புள்ளிகள்)

02) அகக் கோள்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

03) சிறு கோள்களின் பெயர்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

04) ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள வான் பொருட்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

04)

01) பின்வரும் புவியின் செயற்பாடுகளுக்குரிய காலங்களை எழுதுக.

a. புவிச் சுழற்சி :

b. புவிச் சுற்றுகை : (2 புள்ளிகள்)


02) புவிச் சுழற்சியினால் ஏற்படும் விளைவுகள் இரண்டு எழுதுக. (3 புள்ளிகள்)

03) படத்தில் ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் அகலக்கோடுகளின் சிறப்புப் பெயர்களை எழுதுக.

1) A –

2) B –

3) C – (3 புள்ளிகள்)




04) புவியின் பிரதான நான்கு பருவ காலங்களையும் எழுதுக. (4 புள்ளிகள்)

05)

01) வளி மண்டலத்தில் காணப்படும் பிரதான வாயுக்கள் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

02) வளி மண்டலத்தின் பயன்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)

03) நீர் வளம் மாசடைவதற்குக் காரணமான மானிட நடவடிக்கைகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)

04) தென்னாசியப் பிரதேசத்தின் எல்லைகளை கீழ்வரும் திசைகளிற்கு ஏற்ப எழுதுக.

a) வடக்கு :

b) தெற்கு :

c) கிழக்கு :

d) மேற்கு : (4 புள்ளிகள்)

06)

01) பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக.

a. இலங்கையின் இடவிளக்கப் படத்தின் அளவுத்திட்டம்.

b. தேசப் படங்களைத் தயாரிக்கும் போது பிரிக்கப்பட்ட படத்தாள்களின் எண்ணிக்கை (2 புள்ளிகள்)

02) அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட பின்வரும் விடயங்களிலிருந்து பண்பாட்டு அம்சங்களை மாத்திரம் இனங்கண்டு எழுதுக.
(விவசாய நிலம், காடுகள், பிரதான வீதிகள், சமுத்திரங்கள், நதி, குளம், மலைத்தொடர்கள்) (4 புள்ளிகள்)

03) கீழே தரப்பட்டவற்றிற்கு இடவிளக்கப்படத்தில் பயன்படுத்தப்படும் நிறங்கள், குறியீடுகள் என்பவற்றை பயன்படுத்தி வரைக.

a. மாகாண எல்லை :

b. மாவட்ட எல்லை :

c. பிரதேச செயலர் பிரிவு :

d. பிரதான வீதி (A தரம்) :

e. நெற்பயிர்ச் செய்கை :

f. தேயிலைப் பயிர்ச்செய்கை : (6 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457